


29.06.2024

தலைப்புச் செய்திகள்

1. அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில், பிரதமர் திரு.நரேந்திரமோடி 111-வது முறையாக நாளை உரையாற்றுகிறார்.

2. கள்ளச்சாராயத்தை முற்றிலும் ஒழிக்க வகைசெய்யும் தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்திருத்த மசோதா சட்டப்பேரவையில் இன்று நிறைவேறியது.

3. விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே பந்துவார்பட்டி கிராமத்தில் பட்டாசு தொழிற்சாலையில் நேரிட்ட வெடிவிபத்தில் 4 பேர் இன்று உயிரிழந்தனர்.

4. நீலகிரி மாவட்டத்தில் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

5. உலக கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா - தென்னாப்பிரிக்காவை இன்று எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□

மன் கி பாத்

பிரதமர் திரு.நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில், 111-வது முறையாக நாளை முற்பகல் 11 மணிக்கு உரையாற்றுகிறார்.

தூர்தர்ஷன், பிரதமர் அலுவலக லழரவரடிந அலைவரிசைகளில் பிரதமரின் உரை நேரடியாக ஒலிபரப்பப்படும்.

தொடர்ந்து பதினொன்றரை மணிக்கும், இரவு 8 மணிக்கும் அதன் மொழியாக்கம் இடம்பெறும்.

□□□□□□□

பிரதமர்

முன்னாள் குடியரசு துணைத் தலைவர் திரு. வெங்கய்யா நாயுடுவின் வாழ்க்கை பயணம் தொடர்பான 3 புத்தகங்களை பிரதமர் திரு. நரேந்திரமோடி காணொலி மூலம் நாளை வெளியிடுகிறார்.

திரு வெங்கைய்யா நாயுடுவின் 75-வது பிறந்தநாளை ஒட்டி ஹைதராபாத்தில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சியின் போது இந்த புத்தகம் வெளியிடப்படுகின்றன.

□□□□□□□

அமித்ஷா

தேசிய பேரிடர் மீட்பு படையை நவீனமயமாக்குவதே நரேந்திரமோடி அரசின் முக்கிய குறிக்கோள் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்'ா தெரிவித்திருக்கிறார்.

மலை ஏற்ற நிகழ்ச்சியை இன்று துவக்கிவைத்து பேசிய அமைச்சர் பேரழிவுகளின்போது இறப்பை முற்றிலும் தவிர்ப்பதே தேசிய பேரிடர் மீட்பு படையின் இலக்கு என்று குறிப்பிட்டார்.

பேரிடர் மேலாண்மை மீட்பு பணிகளின் போது நம் நாடு சிறந்த நடைமுறைகளை பின்பற்றி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

உலகில் எந்த பகுதிகளில் பேரழிவு ஏற்பட்டாலும் மக்கள் பேரிடர் மீட்பு படையையே எதிர்நோக்குவதாக அவர் எடுத்துரைத்தார்.

□□□□□□□

அறிவிப்புகள்

தமிழ்நாட்டில் கொளத்தூர், கேளம்பாக்கம், செங்குன்றம் ஆகிய இடங்களில் புதிய மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்திருக்கிறார்.

சட்டப்பேரவையில் காவல், தீயணைப்பு மீட்பு பணிகள் துறை தொடர்பான மானிய கோரிக்கை விவாதத்திற்கு இன்று பதிலளித்து பேசியஅவர், கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் 229 காவலர் குடியிருப்புகள் கட்டப்படும் உள்ளிட்ட 100 அறிவிப்புகளை அவர் வெளியிட்டார்

........ வாய்ஸ் .........

கோவளம், திருப்போரூர் பகுதிகளில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்கப்படும்,

தாம்பரம் காவல் ஆணையர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டப்படும்,

கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் மற்றும் ஏற்காட்டில் புதிய காவல் நிலையங்கள் அமைக்கப்படும் என்றும் கூறினார்.

திருச்சி மாவட்டம் மணப்பாறை மற்றும் ராமநாதபுரம் முதுகுளத்தூரில் அமைந்துள்ள மகளிர் காவல் நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டப்படும் என்றார்.

கடந்த 3 ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட 190 அறிவிப்புகளில், 179 நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

□□□□□□□□

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் கள்ளச்சாரத்தை முற்றிலும் ஒழிக்க வகைசெய்யும் தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்திருத்த மசோதா சட்டப்பேரவையில் இன்று நிறைவேறியது.

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தாக்கல் செய்த இம்மசோதாவில், கள்ளச்சாராயம் காய்ச்சுவது விற்பது உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபடுவோருக்கு, ஆயுள் தண்டனை, 10 லட்ச ரூபாய் அபராதம் விதிக்கப்படுவதோடு, சம்மந்தப்பட்டவர்களின் அசையா சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இம்மசோதாவை தாக்கல் செய்து பேசிய முதலமைச்சர்,

சட்டம் ஒழுங்கை காப்பதில் அரசு வெற்றிகரமாக செயல்பட்டு வருவதாக கூறினார்.

மாநிலத்தில் போதைப்பொருள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

கள்ளக்குறிச்சி சம்பவத்தில் அரசு எதையும் மறைக்கவில்லை என்றும் முதலமைச்சர் உறுதியளித்தார்.

குற்றங்களை குறைப்பது மட்டுமல்லாமல், குற்ற எண்ணத்தை மக்களிடையே குறைப்பதும் தான் காவல்துறையின் பணியாக இருக்கவேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழ்நாடு அமைதி மாநிலமாக திகழ்கிறது என்றும், அதனால்தான் வளர்ச்சி மிகுந்த மாநிலமாக இருக்கிறது என்றும் அவர் எடுத்துரைத்தார்

□□□□□□□□

கே.என்.நேரு

வடசென்னை வளர்ச்சித்திட்டப் பணிகளுக்கு 900 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

□□□□□□□□

பேரவையில் கேள்வி நேரத்தின் போது வெளியான சில தகவல்கள்:

உசிலம்பட்டி ஆணையூர் கன்மாய்க்கு 58 கிராம கால்வாய் திட்டத்தின்கீழ் 3 கோடி ரூபாய் மதிப்பில் புதிய மடை கட்டப்படும் என நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் கூறியுள்ளார்.

கிராம பகுதிகளில் அதிக மினி பேருந்துகள் வழித்தடங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் தெரிவித்திருக்கிறார்.

புதிய தாழ்தள பேருந்து சேவையை சென்னையில் முதலமைச்சர் அடுத்தமாதம் தொடங்கிவைக்க உள்ளதாகவும் கூறினார்.

முசிறி கைலாசநாதர் கோவிலில் இந்த ஆண்டு இறுதிக்குள் குடமுழுக்கு நடத்தப்படும் என்று இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

□□□□□□□□

கூட்டத்தொடர் ஒத்திவைப்பு

நடப்பு சட்டமன்ற கூட்டத்தொடரை பேரவை தலைவர் மறுதேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்ததை அடுத்து இந்த கூட்டத்தொடர் நிறைவடைந்தது.

கடந்த 20-ம் தேதி தொடங்கிய கூட்டத்தொடர் காலை மாலை என இரு அமர்வுகளாக நடைபெற்ற நிலையில், மொத்தம் 16 அமர்வுகளில் மானிய கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெற்றது.

□□□□□□□□

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், கஜகஸ்தானில் வரும் 3, 4 தேதிகளில் நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டில் பங்கேற்கிறார்.

இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவது அதிகரித்து வரும் நிலையில் இதுதொடர்பான பேச்சுவார்த்தைகள் இம்மாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப்படும் என்றும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

□□□□□□□□

அமர்நாத் யாத்திரை

இமயமலையில் 3 ஆயிரத்து 880 மீட்டர் உயரத்தில் உள்ள பனிலிங்க தரிசனத்திற்கான புனித அமர்நாத் யாத்திரை இன்று தொடங்கியது.

4 ஆயிரத்து 603 பக்தர்கள் கொண்ட முதல் குழுவினர் இன்று தரிசனம் செய்யவுள்ளனர்.

52 நாட்கள் நடைபெறும் இந்த யாத்திரையில் பங்கேற்க இந்த ஆண்டு மூன்றரை லட்சத்திற்கும் அதிகமானோர் பதிவு செய்துள்ளனர்.

□□□□□□□□

ருபுஊ – நேுவு தேர்வுகள்

தேசிய தேர்வு முகமை ரத்து செய்த ஊளுஐசு – ருபுஊ – நேுவு தேர்வுகளுக்கான புதிய தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி ருபுஊ – நேுவு வரும் ஆகஸ்ட் 21-ம் தேதி தொடங்கி செப்டம்பர் 4-ம் தேதிவரை நடைபெறும் என்று இம்முகமையின் அறிவிக்கை தெரிவித்துள்ளது.

ஊளுஐசு - ருபுஊ நெட் தேர்வுகள் அடுத்தமாதம் 25-ம் தேதிமுதல் 27-ம் தேதி வரையிலும்,

ஒருங்கிணைந்த ஆசிரியர் கல்வி திட்டத்திற்கான ஊேநுவு நுழைவுத்தேர்வு வரும் 10-ம் தேதியும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுஷ் மருத்துவம், முதுநிலை நுழைவுத்தேர்வு திட்டமிட்டபடியே வரும் 6-ம் தேதி நடைபெறும்.

□□□□□□□□

விபத்து

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே பந்துவார்பட்டி கிராமத்தில் பட்டாசு தொழிற்சாலையில் இன்று நேரிட்ட வெடிவிபத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

இதனையடுத்து 15 அறைகள் கொண்ட இந்த தொழிற்சாலையில் 3-க்கும் மேற்பட்ட அறைகள் தரைமட்டமாயின.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

வெடிவிபத்து நேரிட்ட போது தொழிற்சாலைக்குள் 50 பேர் பணியாற்றி கொண்டிருந்ததாக தெரிகிறது.

தீயணைப்பு படைவீரர்கள் தீயை அணைக்கும் பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ள நிலையில், இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகளும் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

இதனிடையே உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 3 லட்சம் ரூபாய் அறிவிக்கப்பட்டுள்ளது.

□□□□□□□□

அணை

தர்மபுரி ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று அதிகரித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

□□□□□□□□

கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே மஞ்சநாயக்கனூர் கிராமத்தில் வாந்தி, வயிற்றுபோக்கு, மயக்கம் காரணமாக உடல்நிலை பாதிக்கப்பட்ட இருவர் கோவை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உடல்நல குறைவிற்கு கள்ளச்சாராயம் காரணமா என போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

உணவு ஒவ்வாமையே உடல் நல குறைவிற்கு காரணம் என்று முதல் கட்ட விசாரணையில் தெரியவந்ததாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

□□□□□□□□

வானிலை

மேற்குதிசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழ்நாட்டில் பரவலாக அடுத்த 5 தினங்களுக்கு இடி மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது

நீலகிரி மாவட்டத்தில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழை நீடிக்கும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

மன்னார்வளைகுடா, தென்தமிழக கடலோரம், மத்திய மேற்கு வங்கக்கடல், வடக்கு ஆந்திரம், தெற்கு, வடக்கு வங்க கடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த 5 நாட்களுக்கு இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

□□□□□□□

கிரிக்கெட்

உலக கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

பிரிட்ஜ் டவுனில் நடைபெறும் இந்த போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

20 - 20 கிரிக்கெட் போட்டியில் இரு அணிகளும் இதுவரை 26 ஆட்டங்களில் மோதியுள்ள நிலையில் 14 போட்டிகளில் இந்தியாவும்,

11 போட்டிகளில் தென்னாப்பிரிக்காவும் வெற்றி பெற்றுள்ளன.

ஒரு ஆட்டம் டிராவில் முடிவடைந்துள்ளது.

□□□□□□□

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.